தமிழர் நேசன்

(தமிழர் கல்விச்சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VI. } துந்துபி௵ ஐப்பசி௴ } பகுதி 7.

செல்வத்தின் வறுமை

The Poverty of Riches

ராஜமகேந்திரம் கவர்ன்மெண்டு கலாசாலையில்
இரசாயனநூல் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் K. C. வீரராகவ ஐயர், M.A.,L.T.,F.C.S.,
மில்கேட் மாதாந்தப்பத்திரிகையிலிருந்து மொழிபெயர்த்து
எழுதியது.

பெருஞ் செல்வமுடைமை இல்லற நன்மைகளையும் வாழ்க்கைத் துணை நலங்களையும் விலைக்கு வாங்கமுடியாது.

அபரிமிதமான ஆகாரப் பொருளுள்ளவர்கள் ஆண்மையுடையவர் அல்லர். அபஜெயமடையாத எண்ணிறந்த ரோமானிய வீரர்கள் ஒரு சமயத்தில் படையெடுத்துச் செல்லும் மார்க்கத்தில் அகப்பட்ட கோதுமையை உண்டே பன்னாட் கழித்தனராம். புவியிலுள்ள பெரும் பணக்காரரும் சாதாரணக் கூலியாட்போலவே குறைத்து உண்கின்றனர். தன் சாப்பாட்டுக்கு உலகில் அகப்படக்கூடிய அரிய காய் கனிகளையும் ரசமான பதார்த்தங்களையும் கப்பல் கப்பல்களாக ஆண்டுரு கார்னீஜிக்கு வரவழைக்கப்படுமுண்டு; ஆயினும்

அவர் சத்துமாவையே பெரிதும் உண்டனர். நியூ யார்க் நக ரத்திலுள்ள ஸிட்டி நாஷனல் பாங்கின் தலைவரான பிரான்க் வாண்டர் லீப் என்பவர் தன்னை மகிழ்வூட்டுவதற்கான பெரு விருந்துகளைச் செய்வதற்குப் பல்லாயிரம் மடைநூற்புலவர் களை அமர்த்திக் கொள்ள முடியும்; ஆயினும் அவர் தினம் இரண்டு தடவையே சாப்பிடுகின்றனர். வாட்டர்லூ க்ஷேத் திரத்தில் மகா வீரனாகிய நெப்போலியனை முறியடித்த வெல் லிங்டன் பிரபு அமிருதத்தையே புஜித்திருக்கக்கூடும்; சில சமயங்களில் பல நண்பர்களுக்கு நல்விருந்து செய்வனே அளிப்பர். ஆயினும் அவர் நியமமாய் உண்டவை ஒரு இறைச்சித் துண்டும் ஒரு வெந்த உருளைக் கிழங்குமே. வாட்டர்லூ போர்க்களத்தில் நெப்போலிய தீரர் தோல்வி யடைந்தது அவர் அஜீரணத்தால் வருந்தியதனாலே என்று சில நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

அத்தியாவசியமான ஆகாரத்தைப் பெறுவதற்கு அபரி மிதமான பொருள் வேண்டுவதில்லை. கோடீசுவரப்பிரபுவும் ஒரு சாதாரணத்தொழிலாளியை விடத் தன்னாகார நிமித்தம் மிகுதியாகப் பணம் செலவழிக்கக்கூடாது. பாடுபட்டுப் பணத்தை மீத்து ஆகாராதிகளைப் பலப்படுத்தினதாலே பல நோய்கள் உடம்பிற் புகுந்தன என்று பலர் தம் அனுபவத் தில் அறிந்துணரக்கூடும். வியாதிகளுக்கு வைத்தியரிட்ட பேர்களிலிருந்து, மூக்குப்பிடிக்கத் தின்றதனாலேயும் கை வலிக்கவேலை செய்யாததனாலேயும் நோயாளிகள் ஏற்படு கிறார்கள் என்று தெரியவருகிறதாக மூதறிஞராகிய ப்ளேட் டோ சொல்லியிருக்கிறார்.

சோம்பலை விரும்புகிறவர்களுக்கு அது ஒரு பொழு தும் குறைவதில்லை. லிங்கனாவது கார்லைலாவது வாஷிங் டனாவது ஒரு வேலையிலிருந்த போது மறந்தும் கடியாரத்

தில் மணி பார்த்ததில்லை. தனக்கு பின்னர் நன்மை பயக்குமோ என்பதை நினையாமல் செய்யும் தொழிலில் வரும் இன்பத்தையே கருதி எடிசன் அறிஞர் தினந்தோறும் பதினெட்டு மணி நேரம் தம் தொழில்களை விடாது முயல்கின்றனர். சிஸ்டின் ஆலயத்தில் என்றும் அழியாத்தம் சித்திரங்களை வரைந்த காலத்தில் மைக்கல் அன்ஜிலோ என்றவர் பலவாரங்களாக அம்மாடையைக்களையாமல் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் சித்திரித்தாராம். குமாஸ்தாவேலை பார்த்தபோது ஸர் வால்டர் ஸ்காட் துரை வைகறை யாமத்தில் எழுந்து தமது பெருமை வாய்ந்த கதைகள் சிலவற்றை எழுதினராம். "உனக்கு அறிவு வேண்டுமானல், அதற்காக உழைக்கவேண்டும்; உணவு வேண்டுமானலும் உழைக்கவேண்டும்; இன்பம் வேண்டுமானலும் உழைக்க வேண்டும்; உழைப்பே இம்மைக்கு உறுதிபயக்கும்" என்று ரஸ்கின் சொன்னது ஓர் அரிய உண்மையாகும்.

உன்னிடம் பெரும் பணமிருந்தால் நீ பல்லாயிரம் ஆடைகளை வாங்கலாம்; ஆயினும் ஒவ்வொன்றைத்தான் ஒவ்வொரு சமயங்களில் உடுக்கமுடியும். ஸாக்ரட்டீஸ் தம் வாழ் நாள் முடிய ஒரு ஜோடி பாதரக்ஷையையே உபயோகித்தனராம்; ஆயினும் அவர் பெயர் இன்றளவும் உலவுகின்றது. பணத்தைக்கொண்டு அழகான பல படங்களையும் கீர்த்தியான பல அடிமைகளையும் வாங்கி உன் வீட்டை அலங்கரிக்கக்கூடும்; ஆயினும் இவையும் சுகத்தைக் கொடுப்பன அல்ல. மாணிக்கம், நல்முத்து, பவளங்கள் பதித்த பொற்கட்டில்களும் தொட்டில்களும் வீட்டில் வாங்கிவைத்த போதிலும், அவை மனதுக்குத் திருப்தியைக் கொடுப்பனவல்ல. வால்டன் குட்டத்தினருகே தோரியோமகான் வசித்த போது, அங்கே தாம் கண்ட ஒரு கல்லையே தமது காற்காலி

யாக உபயோகித்துப் பின்னர் அதை அப்பால் உருட்டி விட்டாராம்.

பணமிருந்தால் அழகிய பூங்காவனம் ஏற்படுத்தி மத்தியில் ஒரு திவ்ய அரண்மனை கட்டலாகும்; ஆனால் பரம்பரையாக வந்திருக்கிற கதையைக்கேள்: டையோஜனிஸ் என்ற தத்துவஞானி தம் வாழ் நாளை ஒரு மரத்தொட்டியிலேயே கழித்தனராம். அப்பொழுது அரசன் அவரைத் தரிசித்து "தம்மிடம் அவர் வேண்டுவன யாவை" என்று கேட்டானும் அவர் "விலகியிரு ; சூரியனை மறைக்காதே போ" என்று சொன்னராம். பண மிருந்தால், தங்கக்குழல்களாலாகிய வாத்தியப்பெட்டியை நீ வாங்கலாகும்; ஆனல் பீட்ஹோவன் என்ற இசைப்புலவர் தம் சந்தம் நிரம்பிய இன்னிசைக் கீர்த்தனங்களை ஒரு சாதாரண பழைய வாத்தியப் பெட்டியின் உதவியாலேயே பாடினர். பணமிருந்தால், மனோகரமாய் ஒரு சித்திரமண்டபத்தை ஜோடிக்கக்கூடும் ; ஆனல் டர்னர் என்றவர் ஒரு சிறு மெத்தை யறையில் ஒரு உடைந்த பீங்கானில் வர்ணங்களைக் கலந்து தம் சித்திரங்களை வரைந்தார்.

ஸர் ஜோஷுவா ரெய்நால்ட்ஸ் எழுதிய படங்களைப் பணம் வாங்கக்கூடும்; ஆனல் அந்திக்காலத்து செக்கர்வானம் எல்லாருக்கும் பணச்செலவில்லாமலே தென்படுகின்றது. யாழ் வல்லாருக்கும் குழல்வல்லாருக்கும் பணங்கொடுத்து சங்கீதக்கச்சேரி வைக்கலாகும் ; ஆனல் வானம்பாடியின் இசை ஒலியும் குழந்தைகளது மழலைச் சொல்லும் பணக்காரனுக்கும் ஏழைக்கும் ஒன்று போலவே இன்பம் கொடுக்கின்றன. பணம் வாழ்வின் உண்மை நலங்களை பயப்பதன்று ; போதுமென்ற மனதையும் மாசற்றவாழ்வையும் கொடுப்பதன்று; நன்மையையும் அந்தமி லின்பத்தையும் தருவதன்று.

புதுவிதப் பள்ளிக் கூடங்கள்

New Types of Schools

ஸ்ரீமான் V. நாராயண ஐயர், M.A., M.L., எழுதியது.

இந்தியாவில் சர்வ கலாசாலைச் சட்டத்திற்கு உட்பட்டிருக்கும் பள்ளிக் கூடங்களில் எல்லாம் அவைகளை எவ்வாறு நிர்வகிக்கவேண்டும், அவைகளில் எவ்விதப்படிப்பை எவ்விதமாய் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கும் அதிகாரம் ஒரேயிடத்தில் இருப்பதால் அவையாவும் ஒன்றைப் போலொன்றாக இருக்கின்றன. ஒரு பள்ளிக் கூடத்தைக் கவனித்துப் பார்த்தால் மற்றொன்றைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை, எல்லாவற்றிலும் ஒரே விதமான ஏற்பாடுகள், ஒரே வகையான படிப்பு முறைகள், ஒரே பாடங்கள், ஒரே நோக்கங்கொண்ட உபாத்தியாயர்கள் என்று இங்கு இருப்பது வேறு எந்நாட்டிலும் இல்லை என்று சொல்லுகிறார்கள்.

இவ்விதப் பள்ளிக் கூடங்கள் போதுமா? வேறு நூதன வழிகளில் முயன்று இவைகள் நாட்டிற்கு உதவுவதை விட அதிகம் உதவ முடியுமா? என்று விசாரிக்கு முன், இவ்விதப் பள்ளிக் கூடங்களால் நாட்டிற்கு ஏற்படும் நன்மையை அளவிடவேண்டும். உதாரணமாக கிராமப் பள்ளிக் கூடங்களை எடுத்து கொள்வோம்; இவை பெரும்பாலும் நகர பரிபாலன சங்கத்தார்களாலும் (Municipalities) ஜில்லாச் சபையாராலும்(District Boards)தாலூகாச் சபையாராலும் (Taluk Boards)சற்று சர்க்காரின் பொருளுதவியைக் கொண்டும் தங்கள் செலவிலுமாய் நடத்தப்படுவன; இவைகளை மேற்பார்வை

யிடும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளுக்கிணங்கிய படிப்பு முறைகளே இவைகளில் அநுஷ்டிக்கப்படுவன; புது முறைகளை அநுஷ்டிப்பதற்கு இடமில்லை. பொதுவாய், இவைகளில் எழுதப் படிக்கவும் கணக்குப் போடவும் கற்பிக்கப்படுகிறது; இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் மிகக்குறைவு என்ற குறையை இப்பள்ளிக் கூடங்கள் நீக்குவன வாயினும் இவைகளில் மேல்சாதிக் குழந்தைகளும், கைத்தொழில் பயின்று வேலை செய்து சம்பாதிப்பது இழிவு, எழுதப் படித்து சம்பாதிப்பதே மேலெனக் கருதும் வேறு சிலரின் குழந்தைகளுமே படிக்கின்றன; வியாபாரிகளும் தங்கள் குழந்தைகள் எழுதப் படிக்கக் கற்றுகணக்கு போடத் தெரிந்தால் வியாபாரம் செய்வதற்கு பிரயோசனப்படுமென்று அவர்களை இந்தப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்புகிறார்கள் ஆனால் இது போதுமோ? பள்ளிக் கூடத்தில் வாசித்ததின் பயனாக ஒவ்வொருவனும் எத்தொழிலில் அமர்ந்த போதிலும் அதில் அதிக சம்பாத்தியம் செய்யும் சக்தி கொடுக்கும் படிப்பன்றோ இந்தியாவிற்கு தற்காலத்தில் அவசியம் வேண்டியது. அதற்கு எவ்விதப் படிப்பு முறைகளை அநுஷ்டிக்கவேண்டும். எவ்வித சீர்த்திருத்தங்களைச் செய்யவேண்டும், என்பதே படிப்பிப்போராகிய சர்வ கலாசாலை யதிகாரிகளின் கவலை. தற்காலத்தில் சாதாரணமாய் வழங்கும் பள்ளிக்கூடங்கள் அவ்வளவு பயனளியாததற்குக் காரணங்கள் :—(1) ஜனங்கள் ஏழைகளாக விருப்பது (2) கிராமவாசிகளுக்கு உபயோகமற்ற படிப்பை மட்டும் கிராமப் பள்ளிக் கூடங்கள் போதித்து வருவது (3) உபாத்தியாயர்கள் சொல்லிக்கொடுக்கும் முறைகளைக் கற்றறியாதவர்களாக விருப்பது (4) படிப்பு சிலருக்கு மட்டுமே எட்டுவது என்பதும், இவைகளை அறிந்து தகுந்த புதியமுறைகளை அநுஷ்டிக்க வேண்டுமென்பதும் சீர்

திருத்தக் கக்ஷியாரின் கொள்கைகள் ஆகவே வேறுவிதமான பள்ளிக்கூடங்கள் இந்தியாவில் இருக்கின்றனவா? அவை எவ்விதம் நடைபெறுகின்றன வென்று அறிவது அவசியமாதலின் அவற்றைப்பற்றி விவரிப்போம். ஏழைகள் படிக்கும்படி உதவும் பள்ளிக்கூடங்கள் முக்கியமாய் நான்கு வகையாவன :—

1. இராப்பள்ளிக்கூடங்கள்:—முக்கியமாய் வயதானவர்களுக்கு எழுதப்படிக்கச் சொல்லிக்கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டவை படிக்க வருபவர் நாள்முழுதும் வேலை செய்து ஓய்ந்திருப்பார்கள் ஆகையால் உபாத்தியாயர் உத்சாகத்துடன் சொல்லிக்கொடுப்பவராக இருக்கவேண்டும் பள்ளிக்கூடத்தில் படுக்க சௌகரியங்கள் இருந்தால் வருபவரில் சிலர் அங்கேயே படுத்துக்கொள்வார்கள். பள்ளிக்கூடம் கிராமத்திற்குள்ளேயாவது அல்லது அருகாமையிலாவது இருத்தல் வேண்டும். அதற்கு வரும்வழி நிர்ப்பயமாயிருக்க வேண்டும் பள்ளிக்கூடத்தில் கண்களைக் கெடுக்காதனவான நல்ல விளக்குகள் எரியவேண்டும்.

2. அரைப் பள்ளிக்கூடங்கள் :—இவை முக்கியமாக ஏழைகளின் குழந்தைகள் வாசிப்பதற்குப் பிரயோசனப்படுபவை. இரண்டு மூன்று மணிநேரம் இங்கே வாசித்துவிட்டு பிறகு வீட்டிற்குப்போய் தாய் தகப்பனுக்கு அவர்கள் வேலைகளில் சகாயம் செய்வதற்கும், வேறு சிறுவேலைகளைச்செய்து சம்பாதித்து குடும்பத்திற்கு உதவுவதற்கும் இடமுண்டு. அந்தக் குடும்பத் தொழிலிலுள்ள பற்று விட்டுப்போகாததினால்முழுவேளைப் பள்ளிக்கூடங்களில் படிக்கும்வாலிபர்களைப் போல் வம்சத்தொழிலை நிந்தித்துப் படித்துச் சம்பாதிப்பதே மேல் என்று கருதமாட்டார்கள் இவைகளில் படிக்கும் மாணவர்கள். முழுவேளைப் பள்ளிக்கூடத்துப் பையன்களைப்போல இவர்களுடைய தேகக்கட்டு தளர்ந்து போவதில்லை. தங்கள்

தாய் தந்தையர்களுக்கும் [illegible] இவர்கள் உதவமுடி
யும். இப்போது சாதாரணமாய் வழங்கும் பள்ளிக்கூடங்களை
விட, எழுதப்படிக்கவும் கணக்குப்போடவும் மற்றும் கற்றுக்
கொடுத்து, தங்கள் உரிமை கடமைகளையும் சௌகரியங்களை
யும் கவனிப்பதற்கு வேண்டியதான புத்தியைச் சற்று கூர்மை
யாக்கி, கைத்தொழிலில் ஆசையையும் இயற்கை அற்புதங்
களை யறிய வேண்டுமென்ற ஊக்கத்தையும் புகட்டுவனவாக
இவ்விதமான பள்ளிக்கூடங்கள் எங்கும் ஸ்தாபிக்கப் பட்
டால் நலமாக விருக்கும்.

3. விடுமுறைப் பள்ளிக்கூடங்கள் :—இவை வருஷத்
தில் சிலமாதங்களில் மட்டும் நடைபெறும் பள்ளிக்கூடங்கள்.
கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு வருஷமுழுவதும் கற்பிப்பதை
விட ஊக்கத்துடன் அதி வேகமாய் சில மாதங்கள் கற்பிப்
பது அதிகப் பலனைத் தரும் என்றும்; குடியானவர்கள் பயி
ரிட்டு சாகுபடி செய்தானபின் ஒழிந்து ஓய்வு நாட்களில் பள்
ளிக்கூடத்தை நடத்தி அவர்களுக்கு வயல்களில் வேலையிருக்
கும்போது பள்ளிக்கூடங்களை அடைப்பதே நலமென்றும்
இவ்விதமான பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள்.

4. சாப்பாட்டுப் பள்ளிக்கூடங்கள் :—பிள்ளைகளை பள்
ளிக் கூடத்திற்கு அனுப்புவதால் அவர்கள் சம்பாதிக்க முடி
யாததாலும், தாங்கள் சம்பாதிப்பது குடும்பச் செலவிற்கு
போதாததாலும்; அவர்களை அனுப்பமுடியாமல் தத்தளிக்கும்
ஏழைகளுக்கு உதவுவதாய் பிள்ளைகளுக்கு சாப்பாடுபோட்டு
படிப்பிக்கும் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

இவ்விதமாக, பல உபாயங்களால் படிப்பைப் பரவச்
செய்ய முயலும் பள்ளிக்கூடங்கள் என்னமுறைகளை அநுஷ்
டித்து ஆங்காங்குள்ள இடையூறுகளை எப்படி போக்குகின்
றன என்பதை யுணரவேண்டி அவைகளில் சிலவற்றை உதா
ரணங்களாக எடுத்துக் காட்டுவோம்.

சாப்பாடு போடும் பள்ளிக் கூடங்கள்
Boarding Schools

முதுலுங்கு தேசத்தில் இவ்விதப் பள்ளிக் கூடங்கள் சில ஏற்பட்டிருக்கின்றன; பையன்கள் விடியற்காலமே எழுந்து பள்ளிக்கூடம் இரண்டு மூன்று மைல் தூரமிருப்பினும் நடந்து போகிறார்கள்; அருகிலுள்ள சாதாரணப் பள்ளிக் கூடங்கள் கிட்ட விருப்பினும் அங்கே போவதில்லை; மத்தியானச் சாப்பாடு பையன்களுக்கு பள்ளிக்கூடத்திலேயே பண மின்றி போடப்படுகிறது; சமைப்பதற்கு ஒரு கிழவிக்கு சாப்பாடும் இரண்டு ரூபாயும் சம்பளம்; இவ்விதப் பள்ளிக்கூடம் சுற்றி இருக்கும் கிராமங்களிலுள்ள ஏழைப் பையன்கள் வந்து படிப்பதற்கு நன்கு உதவுகின்றது.

இதே வகுப்பில், சிறந்ததான ஒரு பள்ளிக்கூடம் சென்னைப்பட்டணம் மைலாப்பூரில் "இராம கிருஷ்ணமாணவர் கிருகம்" என்று பெயர் பெற்று விளங்குகின்றது.

இது "ஸல்லிவன்" தோட்டச்சாலையில் S. G. சீனிவாஸாச்சாரி அவர்களால் நன்கொடையாக கொடுக்கப்பட்ட ½ ஏக்கர் பூமியில் கட்டப்பட்ட மாடிக்கட்டிடம்; கட்டிடச் செலவு ரூ 2,28500 வரையாயிற்றென்றும் அதில் ரூ. 89,678 சர்க்காரால் கொடுக்கப்பட்டதென்றும் தெரிய வருகிறது; முதலில் ஏழைப்பிள்ளைகள் சாப்பிட்டு குடியிருந்து வாசிக்கும் இடமாகக்கட்டப்பட்ட இந்த "கிருகம்" சமீபத்தில் பையன்கள் குடியிருந்து வாசிக்கும் பள்ளிக்கூடமாக ஆக்கப்பட்டது; பதினேழு வருஷங்களுக்கு முன், இராம கிருஷ்ண பரமஹம்ஸர் என்ற பெரியாரின் பெயரை

விட்டு, தனவான்களிடமிருந்து கிடைத்த மாதப் பொருளு தவியைக்கொண்டு, ஏழை மாணவர்கள் வசிப்பதற்கு ஒரு வீட்டை வாடகைக்கு வாங்கி, அங்கே வாரச்சாப்பாட்டிற் குத் திரிந்துழலாமல் இருக்க புத்திசாலிப் பையன்களுக்கு சாப்பாடு போடுவதென்று ஆரம்பிக்கப் பட்ட இந்த 'கிருகம்', வரவர இதன் அநுகூலத்தையுணர்ந்தோரால் கொடுக்கப் பட்ட பொருளுதவி அதிகரிக்கவே, சொந்தக்கட்டிடத்தில் முன்னிலும் அதிகமாய் ஏழை மாணவருக்கு உதவுகின்றது. 1905-ம் வருஷவரும்படி ரூ. 428; 1912-ம் வருஷத்தில் ரூ. 2302 கிடைத்தது. அப்போது 25 மாணவர்களுக்கு உதவ முடிந்தது; 1917 வருஷத்திய வருமானம் ரூ. 6288; ஆயினும் சாமான்களின் விலையுயர்ந்ததால் 30 மாணவர்களுக் கே உதவ முடிந்தது. புதிய கட்டிடத்தில், மாணவர் இருப்பதற்கு 26 அறைகள் இருக்கின்றன. அறைக்கு மூன்று பேராக 78 மாணவர் இருக்கமுடியும்; கடவுள் வழி பாட்டிற்கென்று அழகிய தோர் மண்டபம் போன்ற பெரு அறை ஒன்று இருக்கின்றது; சமையல் சாப்பாட்டுக்கு தனிக்கட்டிடங்கள் இருக்கின்றன. நோயாளிகள் தனித்தி ருப்பதற்கு வேறு சிறு கட்டிடம் ஒன்று இருக்கின்றது. மாணவர்களின் செலவிற்கு மாதந்தோறும் தர்ம சிந்தனை யுள்ளவர்களிடமிருந்து வசூலிக்கப் படும் பணத்தைக் கொண்டே நடக்கிறது.

இதில் இருக்கும் மாணவன் ஒருவன் பிரதிதினம் என்ன செய்கிறுன் என்பதைக்கவனிப்போம்; காலையில் 4.45 மணிக்கு எழுந்திருக்கிறுன்; தமிழிலோ ஸம்ஸ்கிரு தத்திலோ எல்லோருடனும் சேர்ந்து வழிபாடு மண்டபத் தில் கடவுளைத் துதித்தான பின், அரை மணி நேரம் தேகப் பயிற்சி; பிறகு ஸ்நானம் செய்து விட்டு தன்னறையுட்

போய் வாசிக்கிறான் ; பள்ளிக்கூடம் 9 மணிக்கு ஆரம்பித்து 12 மணிவரையும் பிறகு 2 மணியிலிருந்து 4½ மணிவரையும் நடக்கிறது ; சாயங்காலம் தோட்டவேலை செய்வதும் விளையாடுவதும்; 6½ மணிக்கு மறுபடி வந்தன மண்டபத்திற்கு வந்து 7 மணிவரை தோத்திரப்பாடல்கள் பாடியான பின் சாப்பாடு ; 9-மணிக்கு மேல் வாசிக்கக்கூடாதென்பது நிபந்தனை.

பல வூர்களினின்றும் பல ஜாதி வகுப்பார்களினின்றும் ஏழைப் பிள்ளைகள் இங்கே வந்து வசிக்கிறார்கள், ஆனால் கல்லியாணமான பிள்ளைகளை இங்கே ஏற்றுக் கொள்வதில்லை.

இப்போது, சாதாரணப் பள்ளிக் கூடங்களிற் போலவே சர்வ கலா சாலையிற் புகுவதற்கும், சர்கார் பரீக்ஷைக்குமே, மாணவர்கள் தயாரிக்கப் படுகிறார்கள் ; ஆனாலும் இராமகிருஷ்ண மடத்துச் சந்நியாசிகளாலும் வேறு பிரத்யேகமாய் நியமிக்கப்பட்ட சாஸ்திரிகளாலும் மதவிஷயமான உபந்நியாசங்களை செய்வித்து இவர்களை நன்னடத்தையில் வளர்க்கிறார்கள். கையால் வேலை செய்வது இழிவு என்ற அபிப்பிராயம் கெட்டு, எவ்விதம் உழைப்பதும் நலம் என்ற கருத்து எழும் வண்ணம் எல்லாப் பிள்ளைகளையும்கொண்டு சகல வேலைகளையும் தாங்களே செய்யும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சமையலுக்கு மட்டுமே சம்பள ஆள் போடப்பட்டிருக்கிறது ; தச்சுவேலை, கூடை புனைதல், மூங்கில் வேலை, முதலிய கைத்தொழில்களும் கற்பிக்கப் படுகின்றன.

இவ்வகைப் பள்ளிக்கூடங்கள் புத்திசாலிகளான ஏழை பிள்ளைகள் தங்கள் வீடுகளில் கஷ்டப்பட்டுக்கொண்டும் படிப்பதற்கு வேண்டிய செலவிற்குப் போதுமான பணமில்லாமல் படிப்பை நிறுத்தியும் இண்டாடா திருக்க உதவுகின்றன; ஆயினும் இப்பள்ளிக்கூடங்களில் உபயோகப் படுவனவான படிப்புகள் போதிக்கப் படாமல் சாதாரணப் பள்ளிக்கூடங்

களிலே போல் இருந்தால் இவைகளினின்றும் முழு நன்மை யை நாம் அடைய முடியாது; வீட்டில் போலிருந்து வாசிப் பதால் வாசிப்பின் முழு நன்மையையும் மாணவன் அடை கிறான், நல்லொழுக்கத்தில் பயலுகிறான், என்பதே குடி யிருந்து வாசிக்க உதவும் பள்ளிக்கூடங்களின் மேன்மை. அந்த நன்மையை முற்றும் அடையவேண்டுமென்றால் படிப் பானது பையனுடைய குணங்களுக்கும் நடையுடைபாவனை களுக்கும் பொருந்தியதாக விருக்கவேண்டும் அல்லவா?

இரண்டாவது, இவ்விதப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித் து நடத்துவதற்கு ஏராளமான பணம் வேண்டும்; ஏழை நாடாகிய இந்தியாவில், முழுப்பொழுதையுங்கூட வெளியி லேயே இருந்து செலவிடக்கூடியதான சீதோஷ்ண நிலைமை பொருந்திய இந்தியாவில், அதிகப்பணம் செலவிட்டு கட்டி டங்கள் கட்ட அவசியமில்லை; ஓட்டுச்சார்பு கொண்ட சிறு வீடுகள் போதும் பையன்கள் இருப்பதற்கு மரநிழலில் பாட ங்களை கற்கலாம் அதற்குக்கூட மண்டபங்கள் வேண்டிய தில்லை. அதில் செலவிடும் பணத்தில் பகுதியை மாணவர் களுக்கு வேண்டிய துணி முதலிய வாங்கிக்கொடுத்து புஸ் தகங்கள் வாங்குவதில் செலவிடுதல் மேல் என்று கருதுவோர் இவ்வித "கிருகங்களை" ப்பாராட்டமாட்டார்கள். ஆனாலும் சாசுவதமாய் நிலைத்திருக்க கெட்டிக்கட்டிடங்கள் அவசியம்; மாணவர் மனது இன்புறும்படி நல்ல கட்டிடங்களில் சுத்த மான காற்றையும் உணவுகளையும் உண்டிருந்தால் தானே அவர்கள் நல்வழியில் நடந்து நன்றாய் படித்தறிய முடியும் என்று இவ்வித கிருகங்களின் அவசியத்தை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும் கவலையற்று மனது இன்புற்று இருந்தால் மட்டுமே புத்தி விசாலித்து சிறப்படையக்கூடும்; அழகிய கட்டிடங்களில் வசிப்பதும் அவைகளைக்கண்டு உல்லாஸமாக இருப்பதும் மனிதனின் இயற்கையும் கடமையுமாயிருக்க, இவ்விதமான "கிருகங்களின்" அவசியத்தை வற்புறுத்த வேண்டாமன்றோ!

குளிர்க் காய்ச்சல்
On Chills

லண்டன் மா நகரில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகையின் விசேஷவைத்திய சாஸ்திர நிருபரின் வியாசத்தினின்றும் ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர், B. A., B. L. தொகுத்தெழுதியது.

"பாக்டீரியா முதலாய நுண்ணுயிர் ஆராய்ச்சி மிகுந்த இந்நாட்களிலும் கூடப் "பலர் மிகவும் கஷ்டமாயிருக்கிறது நன்றாக ஜலதோஷம் பிடித்துக்கொண்டிருக்கிறது; ஈரத்தில் நடந்தேன், சளி பிடித்துக்கொண்டது; அல்லது மழையில் நனைந்தேன் அல்லது வாடையில் போனேன் குளிர் கொண்டது அல்லது அவனுக்கு சைத்தியம் கண்டிருக்கிறது" என்றெல்லாம் சொல்லக் கேட்கிறோம். இது வெறும் அறியாமையால் கூறப்படுவது. ஜலதோஷம், சளி எனப்படுவது பாக்டீரியா விளைவிக்கும் ஒரு நோய். அது ஒரு ஆளினிடமிருந்து மற்றொருவன் மீது பாய்ந்து பற்றுமே யன்றி, நீரில் நடப்பதாலும் காற்றில் உலவுவதாலும் அது ஏற்படாது" என்றெல்லாம் டாக்டர் கூறிப் பாமரரைப் பரிகசித்து வந்தனர்.

இது முற்றிலும் சரியல்ல என்பது இப்பொழுது தெரிய வருகிறது. அதைக் கீழே விளக்கிக் கூறுகிறேன். அதற்கு முன்பாகக் குளிர் அல்லது சைத்தியம் (Chill) என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளுவது அவசியமாகும். இது இலேசான காரியமென்று எண்ணியிருக்கவேண்டாம். அதை ஆராயுங்கால் நமக்கு அத்தியாச் சரிய முண்டாகும், விஷயமும் எளிதான விஷயமல்ல.

உதாரணமாக, மலேரியா (Malaria) என்னும் விஷ ஜுரம் — முறை ஜுரம் — கண்ட ஒருவனது நிலைமையை ஆராய்வோம். இந்நோயால் தாக்குண்ட ஒருவன் நோய் கண்டதும் குளிரால் நடுங்குகிறான். நாம் சாதாரணமாய் "குளிர் தூக்கிவாரிப் போட்டு விட்டது" என்று கூறக் கேட்கிறோம். அவன் மீது எத்தனை கம்பளி ஜமக்காளம் கொண்டு போர்த்தினாலும் அவன் இன்னும் குளிருகிறது, குளிருகிறது என்று உடலை நடுக்குகிறானே யொழியக் குளிர் என்னும் உணர்ச்சி அவனை விட்டு நீங்குகிறதில்லை. பக்கத்தில் நெருப்புச் சட்டிகள், வெந்நீர்ச் சீசாக்கள் என்ன கொண்டு வைத்தாலும், அவனுக்கு உள்ளுக்கு சாப்பிட எவ்வளவு சூடான திராவகங்கள்கொடுத்தாலும் அவன்பெற்றிருக்கும் குளிர்உணர்ச்சி எளிதில் நீங்குவதில்லை. அவன் தோல், இரத்தம், தசை, எல்லாவற்றையும் தாண்டி அவனது எலும்பிலேயே குளிர் குடி கொண்டது போல் தோன்றுகிறது. ஆயினும், நாம் அப்பொழுது ஒரு தெர்மாமீடர் (Thermometer) சூடளவை, — காய்ச்சல் குச்சி— ஒன்றைக்கொண்டு அவனது உடல் சூட்டை அளப்போமாகில் அவனுக்கு நன்றாக ஜுரம் அடிக்கிறது, 103 அல்லது 104 டிகிரீ சூடு, அதாவது நார்மல் (இயற்கை, இயற்கையான சூடு, சாதாரணமாய் ஆரோக்கிய நிலைமையில் உள்ள ஒருவன் தேகத்தில் உள்ள சூடு)சூட்டைவிடக் கிட்டத்தட்ட 5 டிகிரீ அதிகமான சூடு அவனது உடலில் இருக்கிறது என்னும் ஆச்சரியமான விஷயம் தெரியவருகிறது. சிறிது நேரத்தில், நாம் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, இந்தக் காட்சியெல்லாம் மாறுகிறது. குளிர் குளிர் என்று பல் தந்தியடிக்கப் பேசியவனது முகமானது ஜிவ் ஜிவ் என்று சிவக்க ஆரம்பிக்கிறது. உடல் நடுங்குவது நின்று போகிறது. போர்வைகளெல்லாம் விசிறி எறியப்படுகின்றன. நெருப்புக்

கள் அகற்றப் படுகின்றன. வெந்நீர் பாட்டில்களுக்கும் உஷ்ணமான திராவகங்களுக்கும் பதிலாகப் பனிக் கட்டியும், பனிபோல் குளிர்ந்த திராவகங்களுமே தேவையாகின்றன. நோயாளிக்குச் சூட்டின் மிகுதியால் மூச்சு விடுவதே கஷ்டமாகி விடுகிறது ஆனால் தெர்மாமீடரால் அளக்கும்போது சூடு மாத்திரம் முன்போலவே 103 அல்லது 104 டிகிரீயாகவே காணப்படுகிறது.

ஆகையால் மெய்யாக சாதாரணத்தை விட அதிகமான சூட்டை அடைந்திருந்தபோதிலும் ஒருவன் எலும்பு வரை குளிர்ந்து போனதாகத் தோன்றும் உணர்ச்சியைப் பெற்றிருக்கக்கூடும். இதற்கும் சாதாரண ஜலதோஷத்துக்கும் உள்ள, எளிதில் தோன்றக்கூடிய, முக்கிய வித்தியாசம் இதை யொட்டியதே. சாதாரண ஜலதோஷத்தில் உடம்புச் சூடு மாறுவதில்லை, சாதாரணமாய் எப்பொழுதும் இருப்பது போலவே இருந்துவரும். மேலும் மேற்கூறிய "குளிருக்கும்" நோயாளியின் உடம்பின் சூட்டுக்கும் அல்லது அவன் இருக்கும் அறையின் சூட்டுக்குமாவது யாதொரு சம்பந்தமுமில்லை. நோயாளியின் மேல் தோல் புறத்தினின்று இரத்தம் அகன்று அவன் முகம் வெளுத்திருந்த காலை அவன் குளிர் உணர்ச்சியைப் பெற்றிருந்தான், மறுபடியும் இரத்தமானது முன்னிலும் அதிகமாய் அவன் தோல் புறத்துக்கு வந்து அவன் முகத்தை ஜிவ் ஜிவ் என்று சிவக்கச் செய்தபோது அவ்வுணர்ச்சியும் அகன்று விட்டது.

எக்காரணம் பற்றி ஆயினும் நமது உடலிலுள்ள இரத்தமானது நமது தோல் புறத்தை விட்டு அகலும் போது நாம் பெறும் உணர்ச்சியே "குளிர்" என்பது ஆகும். மலேரியா என்னும் விஷ ஜுரத்தில் (இதையே மலைஜுரம் என்றும் முறை ஜுரம் என்றும் கூறுகிறார்கள்)

இவ்வாறு இரத்தத்தைத் தோலினின்று அகற்றும் காரணம் யாதெனில் அந்த ஜுரத்தை யொட்டிய ஒருவகை விஷமானது உடலின் உள்புறத்திலுள்ள இரத்தக் குழாய்கள் அனைத்தையும் அகலச் செய்து அவற்றுள் அதிக இரத்தத்தை ஓடச் செய்து, அதன் பொருட்டு தோல் புறத்திலுள்ள இரத்தத்தை எல்லாம் இழுத்துக்கொள்வதே. உடலுக்குச் சிறிது வன்மை வந்ததும் இம் மாதிரியான விபரீதச் செயலைச் செய்துவைக்கும் அந்த விஷமானது முன்போல வேலை செய்ய ஒட்டாது தடைபட்டுப்போகிறது. அப்பொழுது உடலில் முன் போல இரத்தம் ஓடிவர ஆரம்பிக்கிறது: குளிர் உணர்ச்சியும் நீங்கிவிடுகிறது. குளிர்காலத்தில் நாம் குளிர் உணர்ச்சியைப் பெறுவதன் காரணம் உள் நின்று வேலை செய்யும் விஷத்தை யொட்டியதல்ல. வெளியிலுள்ள குளிர் காற்றானது உடல்மீது தாக்கி, தோல் பக்கத்திலுள்ள சிறிய இரத்தக்குழாய்களை இன்னும் சுருங்கச் செய்கிறது. அப்பொழுது அவற்றில் முன் போல அதிகமாக இரத்தம் ஓட முடியாது போகிறது. ஆதலால் நாம் குளிர் உணர்ச்சியைப் பெறுகிறோம்.

இவ்வாறு வெவ்வேறு விதமாக உள்ளூர வேலைசெய்யும் விஷத்துக்கும் வெளி நின்று வேலை செய்யும் நிகழ்ச்சிக்கும் உள்ள பேதத்தை நன்கு அறிந்து கொள்ளவேண்டும்.

(தொடரும்)